✱ பேருந்து முனையத்திலிருந்து இயக்கப்படும்
✱ பள்ளி வளாகத்துக்குள் மாணவர்கள் இறக்கிவிடப்படுவார்கள்

சென்னையில் 25 பள்ளிகளுக்கு காலையும், மாலையும் சிறப்புப் பேருந்துகள்: உதயநிதி துவக்கி வைத்தார்

சென்னை, ஆக.19– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவிகளுக்கு நடப்பு கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார்.

சென்னை மாநகரில் பயிலும் மாணவ, மாணவிகள் அவர்களது தினசரி பேருந்து பயணத்தின்போது மிகுதியான கூட்டம் மற்றும் பொதுமக்களுடன் நெரிசலில் நின்று கொண்டு பயணிப்பது போன்ற சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதை தவிர்க்கவும், மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பேருந்து சேவையை வழங்கவும் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளுக்கு, 50 பயண நடைகளாக "சிறப்பு மாணவர் பேருந்துகளை" காலை பேருந்து முனையத்திலிருந்து இயக்கி, வழித்தடங்களில் பள்ளி மாணவர்களை மட்டும் ஏற்றி, பள்ளி வளாகத்தின் உள்ளே சென்று இறக்கிவிடப்படுவர்.

மேலும் மாலை நேரங்களில் பள்ளி வளாகத்தின் உள்ளிருந்து மாணவர்களை ஏற்றிக் கொண்டு, உரிய வழித்தடத்தில் இயக்கப்படும். இதனால் மாணவர்கள் பாதுகாப்பாகவும், நெரிசலின்றியும் பயணிக்க இயலும். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலிருந்து பள்ளி மாணவர்களுக்கு என இயக்கப்படும் சிறப்புப்பேருந்துகளை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் 35,12,147 மாணவ, மாணவிகள் பயணம் மேற்கொள்ள 2025–2026 கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளது. இதில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 4 லட்சத்து 10 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.பிரபு சங்கர், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், இணை மேலாண் இயக்குனர் சி.கு. ராகவன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கர்நாடக இசை, மிருதங்கம், வயலின், நாட்டியம், நாடகம்

5 கலைஞர்களுக்கு 'வாணி கலா நிபுணா' விருது: ஐகோர்ட் நீதிபதி பிபி பாலாஜி வழங்கினார்

சென்னை, ஆக 19– தி நகர் வாணி மகாலில் தொடர்ந்து 15 நாள் நடைபெறும் 14வது இசை விழா கோலாகலமாகத் துவங்கியது.

ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா மற்றும் இந்தோ நேஷனல் லிமிடெட் இணைந்து நடத்தும் இந்த இசை விழாவை சென்னை ஐகோர்ட் நீதிபதி பிபி பாலாஜி துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

வாய்ப்பாட்டுக் கலைஞர் பிருந்தா மாணிக்கவாசகன், வயலின் கலைஞர் மைசூர் ஸ்ரீகாந்த், மிருதங்க வித்வான் மேலக்காவேரி பாலாஜி, பரதநாட்டிய கலைஞர் ராதிகா வைரவேலன், நாடகக் கலைஞர் லாவண்யா வேணுகோபால் ஆகியோருக்கு வாணி கலா நிபுணா விருதை வழங்கினார்.

பாரம்பரியமும் திறமை வாய்ந்தவர்கள் சந்திக்கும் இடமாகவும் உள்ளது வாணி மஹால். இசைக் கலைஞர்களையும் நாட்டியக் கலைஞர்களையும் ஊக்குவிப்பது கலையை விட மிகப்பெரியது என ஸ்ரீதியாக பிரம்மகான சபா உறுதி செய்து வருவதை நீதிபதி மகிழ்ச்சியுடன் வெளியிட்டு வாழ்த்தினார்.

தலைவர் டெக்கான் மூர்த்தியின் தலைமையில் செயல்பட்டு வரும் சபையின் செயல்களை மனம் விட்டு பாராட்டினார்.

ஸ்ரீதியாக பிரம்ம கான சபாவின் தலைவர் மூர்த்தி, ஆண்டுக்கு ஆண்டு நடத்தி வரும் இசை விழாவின் சிறப்புகளையும், இளைய தலைமுறையை ஊக்குவிக்கும் விதத்தில் ரொக்கப்பரிசுகள், சான்றிதழுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாட்டையும் விரிவாக விளக்கினார். ஹம்சத்வனி சபாவின் செயலாளர் ஆர். சுந்தர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். நிகழ்ச்சியை சந்திரமோகன் அழகு தமிழில் தொகுத்து வழங்கினார்.

விழா முடிவில் ராமநாதன் குழுவினரின் சாக்ஸபோன் நிகழ்ச்சி நடந்தது. தினசரி 2 நிகழ்வுகள் (மாலை 4.30, அடுத்து 6.30) வீதம் 30ந் தேதி வரை கலை நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. ஏற்பாடுகளை சபா நிர்வாகிகள் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

சென்னையில் குட்கா புகையிலை பொருட்களை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

சுகாதாரத்துறை, மாநகராட்சி அதிகாரிகள், மளிகைக் கடை உரிமையாளர்களுடன் சென்னை காவல்துறை கலந்தாய்வு

சென்னை, ஆக. 19– சென்னையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை முழுவதும் கட்டுப்படுத்த நடவடிக்கையாக சென்னை பெருநகர காவல்துறை சார்பில் சுகாதார துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மளிகைக் கடை உயரிமையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குட்கா புகையிலைப் பொருட்களை கடத்தி வருபவர்கள், விற்பனை செய்யும் நபர்கள் மீது நடவடிககை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களுக்கு எதிராக காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, போதை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை பெருநகர காவல் மேற்கு மண்டல இணை ஆணையாளர் அலுவலகத்தில், காவல் இணை ஆணையாளர் திஷாமிட்டல் தலைமையில், அண்ணாநகர், கொளத்தூர், மற்றும் கோயம்பேடு காவல் மாவட்ட துணை ஆணையாளர்கள், மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி, உணவு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சுகாதார ஆய்வாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ரகசிய தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கூட்டு ஆய்வுகள் மற்றும் சோதனைகள் குறித்த வழிமுறைகள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து 20 உணவு பாதுகாப்பு, மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

மேலும் புனித தோமையர் மலை காவல் துணை ஆணையாளர் வி.ஆர்.சீனிவாசன் தலைமையில், புனித தோமையர்மலை ஆயுதப்படை கலந்தாய்வு கூடத்தில், வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மளிகை கடை உரிமையாளர்களிடம் குட்கா, மாவா போன்ற புகையிலை பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும், குட்கா, மாவா போன்ற புகையிலை பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குட்கா, மாவா போன்ற புகையிலை பொருட்கள் விற்பனை குறித்த தகவல் ஏதேனும் கிடைக்கப்பெற்றால் உடனடியாக காவல் துறையினருக்கு தெரிவிக்குமாறும், இரகசியம் காக்கப்படும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வியாபாரிகள் சங்கத்தை சேர்ந்த மளிகை கடை உரிமையாளர்கள் சுமார் 50 நபர்கள், காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்சிக் கொடியை பயன்படுத்த த.வெ.க.வுக்கு தடை இல்லை

சென்னை, ஆக.19 கட்சிக் கொடியை பயன்படுத்த த.வெ.க.வுக்கு தடை விதிக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) கட்சிக்கு சிவப்பு, மஞ்சள் நிறங்களில் கொடி உருவாக்கப்பட்டு உள்ளது. இது தங்களது வணிகச்சின்னம் என்றும், இந்த நிறங்களில் கொடியை பயன்படுத்த விஜய் கட்சிக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் சென்னை ஐகோர்ட்டில் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி விசாரித்தார். அப்போது மனுதாரர் தரப்பில், 'வணிக சின்னமாக பதியப்பட்ட எங்கள் சபை கொடியை பயன்படுத்துவது வணிக சின்ன சட்டத்தையும், பதிப்புரிமை சட்டத்தையும் மீறிய செயலாகும். எங்கள் கொடியும், த.வெ.க. கொடியும் ஒன்று போல இருப்பதால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும். அதனால், சிவப்பு மஞ்சள் நிறத்தில் கொடியை பயன்படுத்த த.வெ.க.வுக்கு தடை விதிக்க வேண்டும்'' என்று வாதிடப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து த.வெ.க. தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் பதில் மனு தாக்கல் செய்தார். அதில், 'அரசியல் சித்தாந்த அடையாளமாகவும், தொண்டர்களை அணி திரட்டுவதற்காகவும் கொடியை அரசியல் கட்சிகள் அடையாளமாக பயன்படுத்துகின்றன. ஆனால் மனுதாரரின் இந்த கோரிக்கை சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாதவை ஆகும். கொடியை எங்கள் கட்சி வர்த்தக ரீதியாக பயன்படுத்தவில்லை. நாங்கள் பயன்படுத்தும் இந்த கொடியினால் மனுதாரருக்கு எப்படி இழப்பு ஏற்படும் என்பதையும் கூறவில்லை. எனவே இந்த வழக்கே விசாரணைக்கு உகந்தது அல்ல' என்று கூறியிருந்தார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 'இரு கொடிகளையும் ஒப்பிடும்போது, மனுதாரர் சபை கொடியை த.வெ.க பயன்படுத்தியுள்ளது என கூற முடியாது. த.வெ.க. கொடி மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுத்தும் என்று மனுதாரர் கூறுவதையும் ஏற்க முடியாது. சிவப்பு மஞ்சள் நிறத்தில் கொடியை பயன்படுத்த த.வெ.க.வுக்கு தடை விதிக்க முடியாது. எனவே இந்த கொடியை பயன்படுத்த இடைக்கால தடை கேட்ட மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்கிறேன்' என்று உத்தரவிட்டார்.

தரணி பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 'பிஜிபி ஹவுஸ்', புதிய எண்.59 (புதிய எண்.57), ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண்.91-44-28311313 தொலைநகல் எண்.091-44-28232074
CIN-L65191TN1990PLC019152
மின்னஞ்சல்: secretarial@dharanifinance.com இணையதளம்: www.dharanifinance.com

காணொளி காட்சி (VC)/பிற இதர ஆடியோ காட்சி முறையில் (OAVM) மூலம் நடைபெற உள்ள தரணி பைனான்ஸ் லிமிடெட்டின் 35–வது வருடாந்திர பொது கூட்டம் (AGM) குறித்த அறிவிப்பு.

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ("எம்சிஏ") முறையே வெளியிட்ட நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்), பட்டியலிடப்பட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள் தேதிகள் 09 செப்டம்பர் 2024 மற்றும் 25 செப்டம்பர் 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கைகள் 28 டிசம்பர், 2022, 5 மே 2022, 14 டிசம்பர் 2021, 13 ஏப்ரல், 2021, 2021 ஏப்ரல் 201 5 மே 2020, (ஒட்டுமொத்தமாக 'எம்சிஏ சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படுகிறது) இந்திய அரசு, கார்ப்பரேட் விவகார அமைச்சகம் மற்றும் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட செபி சுற்றறிக்கைகள், ஜனவரி 5, 2023, 13 மே, 2022, ஜனவரி 15 ஆகிய தேதிகளுடன் படிக்கப்பட்டது 2021 மற்றும் 12 மே, 2020 (இனி கூட்டாக "செபி சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படும்) ஆகியவற்றுக்கு இணங்க கூட்டப்பட உள்ள நிறுவனத்தின் 35–வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை பரிவாத்தனை செய்ய தரணி பைனான்ஸ் லிமிடெட்டின் (நிறுவனம்) பங்குதாரர்களுக்கான 35–வது வருடந்திர பொதுக் கூட்டம் (AGM) புதன்கிழமை செப்டம்பர் 24, 2025 அன்று காலை 11.00 மணிக்கு காணொளி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறையில் (OAVM) நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க 35–வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024–25–ம் நிதி ஆண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனம்/நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படும். 35–வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024–25–ம் நிதி ஆண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.dharanifinance.com மற்றும் எஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் அதாவது பி எஸ் இ லிமிடெட்டின் www.bseindia.com–ல் கிடைக்கும். பங்குதாரர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் VC/OAVM வசதி மூலம் மட்டுமே பங்கேற்க முடியும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும். VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் நிறுவனத்தின் சட்டம் 2013–ன் கீழ் குறைந்தபட்சம் பங்கேற்றதை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் முறை

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது பங்குதாரர்கள் மின்னணு வாக்களிப்பு முறையில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படும். மின்னணு வடிவில், காகித வடிவில் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை குறித்து வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல்/புதிப்பிக்காமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் கோரிக்கை கடிதத்துடன் படிவம் ஐஸஸ்ஆர்–1 மற்றும் பங்குதாரர்கள் பெயர் மற்றும் சுய சான்றொப்பமிடப்பட்ட பேன் கார்டு நகல் ஆகியவற்றை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற CAMEO CORPORATE SERVICES LIMITED 'Subramanin Building', No.1, Club House Road, Chennai - 600 002. Phone: (D) 2846 0425, Fax: 044-2846 0129 Grams: CAMEO E-mail: cameo@cameoindia.com Website: www.cameoindia.com என்ற முகவரிக்கு அனுப்பி நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொள்ளலாம்/புதுப்பித்துக் கொள்ளலாம்.

மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் தங்களின் சம்பந்நப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்காளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு / புதிப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏற்கிரி சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க பங்குதாரர்களின் நலன் கருதி மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வாரியத்தின் உத்தரவுப்படி
தரணி பைனான்ஸ் லிமிடெட்
டாக்டர் பழனி G பெரியசாமி
தலைவர்
இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 19, 2025

தரணி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 'பிஜிபி ஹவுஸ்', புதிய எண்.59 (புழைய எண்.57) ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண்.91-44-28311313
CIN-L15421TN1987PLC014454
மின்னஞ்சல்: secretarial@dharanisugars-pgp.com இணையதளம்: www.dharanisugars.com

காணொளி காட்சி (VC)/பிற இதர ஆடியோ காட்சி முறையில் (OAVM) மூலம் நடைபெற உள்ள தரணி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் 38–வது வருடாந்திர பொது கூட்டம் (AGM) குறித்த அறிவிப்பு.

தரணி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் (நிறுவனம்) பங்குதாரர்களின் 38வது ஆண்டு பொதுக் கூட்டம் (AGM), நிறுவனங்கள் சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, வீடியோ கான்பரன்சிங் (VC) / பிற ஆடியோ–விஷுவல் வழிமுறைகள் (OAVM) மூலம், செப்டம்பர் 25, 2025 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. 2013 மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட விதிகள் & பொது சுற்றறிக்கைகள் மற்றும் 09 செப்டம்பர் 2024, 25 செப்டம்பர் 2023, 28 டிசம்பர் 2022, 05 மே 2022, 14 டிசம்பர் 2021, 13 ஜனவரி 2021, 08 ஏப்ரல் 2020, 13 ஏப்ரல் 2020 மற்றும் 05 மே 2020, (ஒட்டுமொத்தமாக 'MCA சுற்றறிக்கைகள்' என்று குறிப்பிடப்படுகிறது) இந்திய அரசு கார்ப்பரேட் விவகார அமைச்சகம் மற்றும் அக்டோபர் 3, 2024, 7 அக்டோபர் 2023, 05 ஜனவரி 2023, 13 மே 2022, 15 ஜனவரி 2021 மற்றும் 12 மே 2020 தேதியிட்ட SEBI சுற்றறிக்கைகள், வணிகத்தை பரிவர்த்தனை செய்வதற்காக, 38வது ஆண்டு பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிறுவனம். MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2024–25 நிதியாண்டிற்கான நிறுவனத்தின் 38வது ஆண்டு பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையின் மின்னணு பிரதிகள், நிறுவனம்/நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்(கள்) ஆகியோரிடம் மின்னஞ்சல் ஐடிகள் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க 38–வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024–25–ம் நிதி ஆண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனம்/நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படும். 38–வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024–25–ம் நிதி ஆண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.dharanisugars.com மற்றும் பங்குச்சந்தையின் இணையதளம் அதாவது மும்பை பங்குச்சந்தையின் www.bseindia.com மற்றும் தேசிய பங்குச்சந்தையின் www.nseindia.com–ல் கிடைக்கும். பங்குதாரர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் VC/OAVM வசதி மூலம் மட்டுமே பங்கேற்க முடியும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும். VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் நிறுவனத்தின் சட்டம் 2013–ன் கீழ் குறைந்தபட்சம் பங்கேற்றதை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் முறை

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது பங்குதாரர்கள் மின்னணு வாக்களிப்பு முறையில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படும். மின்னணு வடிவில், காகித வடிவில் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை குறித்து வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல்/புதிப்பிக்காமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் கோரிக்கை கடிதத்துடன் படிவம் ஐஸஸ்ஆர்–1 மற்றும் பங்குதாரர்கள் பெயர் மற்றும் சுய சான்றொப்பமிடப்பட்ட கான் கார்டு நகல் ஆகியவற்றை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற CAMEO CORPORATE SERVICES LIMITED 'Subramanin Building', No.1, Club House Road, Chennai - 600 002. Phone: (D) 2846 0425, Fax: 044-2846 0129 Grams: CAMEO E-mail: cameo@cameoindia.com Website: www.cameoindia.com என்ற முகவரிக்கு அனுப்பி நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொள்ளலாம்/புதுப்பித்துக் கொள்ளலாம்.

மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் தங்களின் சம்பந்நப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்காளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு / புதிப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏற்கிரி சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க பங்குதாரர்களின் நலன் கருதி மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வாரியத்தின் உத்தரவுப்படி
தரணி சுகரிஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்
டாக்டர் பழனி G பெரியசாமி
செயல் தலைவர்
இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 19, 2025

OrchidPharma — A Dhanuka Group Company —

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்
பதிவு அலுவலகம்: மனை எண்கள். 121 —128, 128A— 133, 138 —151, 159 —164, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் 603110, தமிழ்நாடு, இந்தியா
Ph.+91-44-27444471/72/73, Email id: cs@orchidpharma.com, investorrelations@orchidpharma.com
Website: www.orchidpharma.com

காணொளி காட்சி (VC)/இதர ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் நடத்தப்படும் ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டின் 32வது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றி உறுப்பினர்களுக்கான தகவல் மற்றும் மின்னஞ்சல் புதுப்பிப்புக்கான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தால் (எம்சிஏ) வெளியிடப்பட்ட ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020, மே 5, 2020 தேதியிட்ட 20/2020, டிசம்பர் 28, 2022 தேதியிட்ட 10/2022, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட 10/2023 மற்றும் செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட 09/2024 மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவினால் (செபி) வெளியிடப்பட்ட அக்டோபர் 03, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட பிற பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்கு உரிய நேரத்தில் விதிமுறைக்கப்படும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை பரிவர்த்தனை செய்ய ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டின் (''நிறுவனம்'') 32வது வருடாந்திர பொதுக்கூட்டம் (இனி "ஏஜிஎம்" என அழைக்கப்படுகிறது) சனிக்கிழமை, செப்டம்பர் 20, 2025 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி /இதர ஒலி ஒளி வழிமுறைகள்("VC" / "OAVM") மூலம் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம்/ M/s அபிப்ரா கேபிடல் லிமிடெட், பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் அல்லது அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மார்ச் 31, 2025ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் உட்பட வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் அனுப்பப்படும். மேலும், வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கக்கூடிய சரியான பாதை உட்பட இணைய இணைப்பை வழங்கும் கடிதம் மின்னஞ்சல் முகவரியை அவ்வாறு பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும். வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024–25ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையும் ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.orchidpharma.corn, பங்குச் சந்தைகளின் இணையதளங்கள் அதாவது நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டில் முறையே www.nseindia.com மற்றும் www.bseindia.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். வருடாந்திர அறிக்கையின் காகித நகல், நிறுவனத்தின் பதிவு அலுவலகம்/ investorrelations@orchidpharma.com–ல் வெளிப்படையாகக் கோரும் உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

மின்னணு தகவல்தொடர்புகளைப் பெறுவதற்கு மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்படாத, காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உ